**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.76/2021 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு.குமார் |
| Father Name | திரு.கிருஷ்ணன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **06.04.2026.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

நான் என் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு பிரதிவாதி பெற்றுக்கொள்ளவில்லை (Unclaimed) என திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்பந்த காலம் முடிவடைவதற்கு 3 மாத காலத்திற்கு முன்பே நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு நான் அனுப்பிய அறிவிப்பு அவர் பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த பின்னர் நான் அந்த அறிவிப்பில் உள்ள விவரத்தை கைபேசி மூலம் பிரதிவாதிக்கு தெரிவித்ததாக என் வழக்குரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் நான் கைபேசி மூலம் அவருக்கு எதுவும் சொல்லவில்லை. கடந்த 05.03.2022–ம் தேதி நான் பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்புவதற்கான படி கட்டணம் செலுத்தாததால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன் பின்னர் 2 வருடங்களுக்கு பிறகு இந்த வழக்கு மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்தியன் வங்கியில் என் மனைவி பெயரில் நகையை அடமானம் வைத்து பணத்தை ரொக்கமாக வாங்கினேன். பிரதிவாதிக்கு நிதி நெருக்கடி இருப்பதை 3–ம் நபரிடமிருந்து அறிந்து கடன் கொடுக்க நானாகவே முன் வந்து பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கூட்டுறவு சங்க வங்கியில் பணிபுரியும் திரு.செந்தில்குமார் என்பவர் மூலம் தான் பிரதிவாதியை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. பிரதிவாதி கடன் தேவைக்காக திரு.செந்தில்குமார் என்பவரை அணுகிய போது வங்கியில் கடன் பெறுவதற்கு நீண்ட செயல்முறை மற்றும் நீண்ட காலம் ஆகும் என்பதால் உடனடியாக பணம் தேவை என்றால் அவருக்கு தெரிந்த என்னிடம் கடன் பெற்று தருவதாக சொல்லி என்னிடம் அவரை பரிந்துரை செய்துள்ளார் என்றால் தவறு. செந்தில்குமார் என்பவரை எனக்கு தெரியாது. அடமானப்பத்திரம் என்று சொல்லி நான் கிரைய ஒப்பந்தப்பத்திரம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான அசல் கிரையப்பத்திரம் என்னிடம் உள்ளது. பிரதிவாதி கிரையப்பத்திரம் என்று தெரியாமல் அடமானப்பத்திரத்தில் கையெழுத்து போடுவதாக நினைத்து தான் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் தவறு. ரூ.10

லட்சத்திற்கு கிரையம் பேசி ரூ.2 லட்சம் கிரையத்தொகையில் செலுத்திவிட்டு, பாக்கி ரூ.3 லட்சம் கொடுப்பதற்காக 2 வருட காலங்கள் பொதுவாக யாரும் நிர்ணயம் செய்யமாட்டார்கள் என்றாலும், பிரதிவாதி என்னிடம் ரூ.6 லட்சம் கடனாக பெற்றதால் தான் அதை திரும்ப செலுத்துவதற்கு 2 வருட காலங்கள் நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பொதுவாக கிரைய ஒப்பந்தங்கள் 3 முதல் 6 மாதங்கள் வரை தான் நிர்ணயம் செய்யப்படும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் மனைவி எனக்கு கடந்த 07.06.2021-ம் தேதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அடமானக்கடனை ரத்து செய்து கடனை திரும்ப செலுத்த முன் வருவதாக குறிப்பிட்டிருந்தார் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் செய்வதற்கு முன்பு வழக்கு சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் மற்றும் வருவாய் துறை ஆவணங்களை நான் பார்த்தேன். பிரதிவாதி என்னிடம் அடமானக்கடன் பெற்றதால் தான் வழக்கு சொத்திற்கான அசல் கிரையப்பத்திரத்தை நான் வாங்கி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒப்பந்தம் போட்ட தேதியில் வழக்கு சொத்திற்கு ரூ.10லட்சத்தை விட பல மடங்கு அதிகம் மதிப்பு இருந்தது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் ஏழ்மை சூழ்நிலையை பயன்படுத்தி அவரது சொத்தை பறிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு நான் அடமானக்கடன் தான் கொடுத்தேன் என்றாலும், அவரை ஏமாற்றி கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் கையெழுத்து பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்திற்கு கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்க வேண்டும் என்றும், அதற்கு மாற்று பரிகாரமாக கிரைய முன் பணத்தை திரும்ப பிரதிவாதி செலுத்த உத்தரவிட வேண்டும் என்றும் இந்த வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் மனைவி கடனை திருப்பி தர முன் வந்த போதிலும், பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் அவரிடம் பணத்தை பெற்றுக்கொள்ள முன் வரவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:-**</u> இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.